## மினி தொடர்

புதுடில்லியின் மிகப் பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டல் ஸ்வீட்டில் அவனை இறுக அணைத்தவாறு மெத்தையில் புதையப் புதைய படுத்திருந்தாள் அவள். இரவு முழுவதும் அவனுடன் சுகித்திருந்ததன் களைப்பு தெரிந்தது. ஆனாலும் மனமும், உடலும் மீண்டும் கேட்டது. மெல்லிய இரவு விளக்கின் வெளிச்சத்தில் அவனை ஏறிட்டாள். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது, சீராக ஏறி இறங்கிய சுவாசத்தில் தெரிந்தது. அவனை எழுப்ப அவளுக்குத் தெரிந்த ஒரே வழி அவனின் தலைமுடிக்குள் கையை விட்டு அளைவதுதான். அவளது கைவிரல்கள் இதமாய் அவனது தலைமுடியைக் கோதியதும், மெல்ல கண் விழித்தான் அவன்.

"எஸ் ஹனி..."என்றான் அரைத் தூக்கத்தில்.


"ஐ நீட் யு அகெய்ன்.." அவன் காதருகில் போய் மெல்ல கிசுகிசுத்தாள். அவன் சட்டென்று முற்றிலும் விழித்துக் கொண்டான். கண்கள் ஆச்சரியத்தில் அகன்று பிரகாசித்தன.



"ஹேய்... ராத்திரி முழுதும் தூங்காமல் ஸிக்ஸரும், பவுண்டரியும் அடிச்சாச்சு... மறுபடியுமா...?"

"போறலையே.." என செல்லமாய் சிணுங்கினாள்.





# பாரதி கண்ணம்மா

● இந்துமதி

"இப்போ ஒரு சதம் அடிக்க முடியுமா முடியாதா...?"

அவளிடம் அவனுக்கு மிகப் பிடித்த விஷயமே இதுதான். எந்தவித போலித்தனமும், பாவனைகளும் அற்ற வெளிப்படையான குணம்தான். ஒளிவு மறைவின்றி பேசுவாள். மனதில் பட்டதை பளிச்சென்று சொல்வாள். தன்னிடம் ஆட்டோகிராஃப் வாங்க வந்தபோதே அவளது குழந்தை முகமும், நீண்டகன்ற கண்களும் அவனைப் பெரிதும் கவர்ந்தன. வேண்டுமென்றே அவளைக் காக்க வைத்தான். மற்ற அத்தனைப் பேருக்கும் கையெழுத்திட்ட பின்னர் கடைசியாக அவளிடம் வந்தான்.

"வாட் ஸ் யுவர் நேம்...?"

அவன் தன்னிடம் பேசுவான் என்பதை சற்றும் எதிர்பார்க்காதவள், தாங்க முடியாத சந்தோஷத்தில் பேச்சு எழாமல் தவித்தாள். அந்தத் தவிப்பையும் ரசித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"ஆர் யு ஃப்ரம் இண்டியா?"

'ஆம்' எனத் தலையாட்டினாள்.

"ஃப்ரம் சென்னை...?"

அதற்கு 'இல்லை' எனத்



தலையசைத்தாள்.

"நீ ஊமையா...?"

'ஆமாம்' என்று தலையாட்டப் போனவள் சட்டென்று நிறுத்தி 'இல்லை' என்கிறாற்போல் முகத்தை இடவலமாகத் திருப்பினாள்.

"பேர் சொன்னால் மட்டுமே ஆட்டோகிராஃப் போடப்படும்."

"பாரதி!"

"மீன்ஸ் வாட்...?"

"பாரதி அற்புதமான மிகச் சிறந்த கவிஞர்."

"நீயும் அற்புதமான மிகச் சிறந்த அழகிதான்."

குபீரென்று வேர்த்துக் கொட்ட அவள் நாணித் தலைகவிழ்ந்ததை வெகுவாக ரசித்தான். நாணத்துடன் கூடிய பெண்கள் அவனுக்கு மிகவும் பிடித்தமானவர்கள். ஒரே பார்வையில் இந்த பாரதி தன் மனதைக் கவர்ந்து விட்டதை உணர்ந்து கொண்டான்.

"என்னுடன் சாப்பிட வருவாயா?"

"ஹாங்...?"

"என்னுடன் சேர்ந்து சாப்பிட வருகிறாயா எனக் கேட்டேன்."

உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரன். மேற்கு இந்தியக் குழுவின் வேகப் பந்து வீச்சாளன், மூன்றாவது ஆட்டக்காரனாக அவன் களம் இறங்கும்போதே ரசிகர்கள் "வீ வாண்ட் ஸிக்ஸர்..." என்று குரல் கொடுப்பார்கள். அவனும் அவர்களை ஏமாற்றாமல் ஓவருக்கு ஒரு ஸிக்ஸராவது கண்டிப்பாக அடிப்பான். அதுபோல் அவனது பந்து வீச்சில் விக்கெட் விழும் போதெல்லாம் மைதானத்தில் அவன் ஆடும் நடனம் அவனது கிரிக்கெட்டைப் போன்றே பிரசித்தி பெற்றது. விளையாட்டில் எந்த அளவு வல்லவனோ, அதே அளவு நடனத்திலும் வல்லவன். அப்படிப் பட்டவனா தன்னுடன் உணவு அருந்தப் பிரியப்படுகிறான்? அவளால் நம்ப முடியவில்லை. ஆனாலும் 'சரி' என்று தலையாட்டினாள்.

மறுநாள் முன் இரவில் அவளை மிகப் புகழ் பெற்ற ஓட்டலுக்கு அழைத்துப் போனான். பெரிய நீண்ட அறையின் ஓரமாகப் போடப்பட்டிருந்த மேஜையருகில் அழைத்துச் செல்லப்பட்டவள் திகைத்து நின்றாள். மேஜை விரிப்பில் பெரிதாக அவள் பெயர் எம்பிராய்டரி செய்யப்பட்டிருந்தது. நாற்காலியில், டேபிள் மேட்டில், டம்ளரில், கத்தியில், முள் கரண்டியில் ஸ்பூனில்... பாரதி, பாரதி, பாரதி...

ஒருவித பயம் கலந்த ஆச்சரியத்தில் அவனை ஏறிட்டாள்.

"இதெல்லாம் என்ன...?"

"உனக்கு நான் செய்யும் மரியாதை!"

"எதற்கு...?"

"என்னுடன் சாப்பிட ஒப்புக் கொண்டதற்கு!"

"அதற்காக இத்தனை...?"

"இதுவே குறைச்சல் என்று எனக்குப் படுகிறது. நான்

எப்போதும் இந்த ஓட்டலுக்குத் தான் வருவேன். இதே மேஜையில் தான் அமருவேன். எல்லா பொருட்களிலும் என் பெயர்தான் பொறிக்கப்பட்டிருக்கும். இன்று மாறுதலுக்கு உன் பெயரை எழுதச் சொன்னேன்..."

"ஏன்..?"

"ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்டால் பதில் சொல்லத் தெரியவில்லை. நேற்று உன்னைச் சந்தித்ததிலிருந்து ஒரு விசித்திரமான உணர்வு எனக்குள் ஓடுகிறது. ராத்திரி முழுவதும் உன் முகமும், கண்களும் மனதில் வந்து கொண்டே இருந்தன. இது போன்று யாரும் என்னை ஆட்கொண்டதில்லை. எந்தப் பெண்ணும் சலனப்படுத்திய தில்லை. ஐ திங்க் ஐயம் இன் லவ் வித் யூ!" அலையடித்த மாதிரி சொல்லி முடித்து அவள் கையைப் பற்றி தன் உதட்டருகில் கொண்டு போய் மென்மையாய் முத்தமிட்டு கேட்டான்.

"என் அன்பை நீ அங்கீகரிக் கிறாயா?"

இப்படித்தான் ஆரம்பித்தது அவர்களின் காதல். சாம்பியன் கோப்பைக்கு விளையாட வந்தவன் அவளின் அழகிலும் குணத்திலும் எழ முடியாது விழுந்தான். கிட்டத் தட்ட ஆறேழு மாதங்களாக அவர்கள் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். அவள் வேலையை ராஜினாமா செய்யச் சொன்னவன், எங்கு சென்றாலும் நிழல் போல் அவளைத் தன்னுடன் அழைத்துப் போனான். பத்திரிகைகளுக்கும் மீடியாக்களுக்கும் தங்களின் அன்பு தெரிய வராமல் காப்பாற்ற பெரும்பாடுபட்டான்.



இந்த நிலையில்தான் டி-20ல் விளையாட வந்து டில்லியின் நட்சத்திர ஓட்டலில் தங்கினான். அவளுடன் மிக மிக அன்னியோன்யமாய், பிரியமாய், பாசமாய், காதலாகிக் கசிந்துருகிய நேரம்தான் அது. அவளைத் தன் மார்போடு சேர்த்து அணைத்து முன் நெற்றியில் முத்தமிட்டபோது கண்களை மூடி அந்த சந்தோஷத்தை மனப்பூர்வ மாக அனுபவித்தபடி சொன்னாள்

**"ஏதோ புரட்சி பண்றதா நினைச்சு ஆபரேஷன் தியேட்டர்ல பெரிய நிலைக்கண்ணாடியை வச்சு, அதுக்கு முன்னால ஆபரேஷன் பண்ணீங்க... இப்ப இடம், வலம் மாறி பண்ணியாச்சேன்னு கையைப் பிசைஞ்சா அதுக்கு நான் என்ன பண்ண முடியும், சொல்லுங்க?"**

***-சீர்காழி வி.ரேவதி***

அவள்.

"ஹேய் ரிச்சி.. நீ என்னைப் பைத்தியமாக்குகிறாய்..."

"இல்லை, நான்தான் உன்னிடம் மயங்கி பைத்தியமாய் கிடக்கிறேன்!"

"எத்தனையோ அழகிகள், நடிகைகள், கோடீஸ்வர வீட்டுப் பெண்கள் எல்லாம் காத்துக் கிடக்க, என்னை ஏன் தேர்ந்தெடுத்தாய் ரிச்சி?"

"இதற்கு பதில் சொல்லி நான் அலுத்து விட்டேன் பாரதி.."

"பரவாயில்லை சொல்லு. திரும்ப ஒரு முறை கேட்க வேண்டும்."

"எதுவுமே உனக்கு ஒரு முறை போதுவதில்லை. மீண்டும், மீண்டும் தேவைப்படுகிறது." என்று குறும்பாகக் கண்சிமிட்டினான்.

உருகிப் போனாள் அவள். அவனது அன்பிலும், காதலிலும் அனல்பட்ட மெழுகாகக் கரைந்து போனாள். சடாரென்று எழுந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு பரந்த அவனது மார்பில் முகம் புதைத்து விம்மத் தொடங்கினாள். "ஏய்.. என்ன இது..?" - அவளது முகத்தை நிமிர்த்தியவன் கண்களில் கண்ணீரைக் கண்டதும் பதறிப் போய் கேட்டான்.

"என்னால் தாங்க முடியவில்லை ரிச்சி. இது போன்றதொரு அன்பு எனக்குக் கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை.

எப்பேர்ப்பட்டவன் நீ! உன் அன்பைப் பெறுவது என்பது சாதாரண விஷயமா..? அதிலும் உண்மையான அன்பு; உயிருக்கு உயிரான அன்பு. அதைப் பெற எனக்கு என்ன தகுதியிருக்கிறதென்று யோசித்தேன்..

ஓ.. ரிச்சி.." அவன் முகத்தைத் தன் முகத்தருகில் இழுத்து உதட்டில் முத்தமிட்டாள். "எனக்கு இப்படியே.. இந்த நிமிடமே உன்னை அணைத்துக் கொண்டே செத்துப் போய்விட வேண்டும் போலிருக்கிறது.."

"டோண்ட் பி ஸ்டுப்பிட். நாம் வாழப் பிறந்தவர்கள் பாரதி. எனக்கு உன்னோடு நூறு ஆண்டுகள் வாழ வேண்டும்.." என்றவன் மிக நாசூக்காக அவளை விலக்கி மெல்ல எழுந்து கொண்டான். சின்ன ஃபிரிட்ஜ்ஜைத் திறந்து ஸ்காட்ச் விஸ்கி கலந்து கொண்டான். துளித் துளியாகப் பருகத் தொடங்கியவனைப் பார்த்துக் கேட்டாள்..

"இந்த நேரத்தில் ஸ்காட்ச்.. ஏன் ரிச்சி.."

"மனதில் லேசாய் ஒரு பயம் எட்டிப் பார்க்கிறது.."

"பயமா.. உனக்கா..?"

"ஆமாம் பாரதி. நாம் சேர்ந்து வாழ ஆரம்பித்து ஆறு மாதங்களாகவில்லையா..?"

"ஆறுமாதம், இருபத்தெட்டு நாள், பதினோரு மணி நேரம்.."

"மைகாட்! நாள் கணக்கு, மணிக்கணக்கெல்லாம் கூடவா ஞாபகம் வைத்திருக்கிறாய்..?"

"இது நீ சம்பந்தப்பட்ட விஷயம் ரிச்சி. ஒவ்வொரு நொடியும் எனக்கு முக்கியமானது."

"இந்த அளவிற்கா! ஓ கிரேட் ஹனி. டில்லி மேட்ச் முடிந்ததும்



அடுத்து சென்னை மேட்ச்தான். உன் பெற்றோர் சென்னையில்தானே இருக்கிறார்கள். போய்ச் சந்தித்து விடலாமா..?"

"அஃப்கோர்ஸ்! இந்த முறை நானே என் அப்பா அம்மாவை சந்தித்து நம் திருமணம் பற்றி பேசிவிடலாம் என்றுதான் நினைக்கிறேன்."

"ஒப்புக்கொள்வார்களா..?"

"இது என்ன சந்தேகம்? ஒரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரனை மாப்பிள்ளையாக அடைகிற பாக்கியம் எல்லோருக்கும் கிடைத்து விடுமா என்ன?"

"நோ! எனக்கு அப்படி வேண்டாம்.."

"பின் எப்படி வேண்டும்?"

"இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமைங்கிறதே மறந்து போச்சு."

"ஏன்? எதுக்காகச் சொல்றே?"

"எதிர்வீட்டு மாமியார் - மருமக சண்டையைப் பார்க்காமலே வேலையா இருந்திட்டேன்!"

-என்.பர்வதவர்த்தினி

"என் பெயருக்காகவும், புகழுக்காகவும் அன்றி என்னை எனக்காகவே ஏற்றுக் கொள்ள வேண்டும்..."

"அது எப்படி சாத்தியமாகும் ரிச்சி, உன்னை அவர்களுக்கு எப்படித் தெரியும்?"

"தெரிந்துகொள்ளட்டும்."

"அதற்கு நாளாகும் ரிச்சி. உன்னோடு அவர்கள் பழக வேண்டும். அதற்கெல்லாம் நமக்கு நேரம் எங்கே இருக்கிறது..?"

"அதுவும் சரிதான். எனக்கென்ன சந்தேகமென்றால் ஒரு கறுப்பர் இன இளைஞனை உன் பெற்றோர் அங்கீகரிப்பார்களா என்பதுதான்."

"அங்கீகரித்தே ஆக வேண்டும். வேறு வழியில்லை அவர்களுக்கு...!"

"என்ன சொல்கிறாய்?"

"இரண்டு மாதம்! உன் கருவை வயிற்றில் சுமக்கிறேன்..."

ஒரு விநாடி கண்கள் அகல அவளைப் பார்த்தவன் "ஓ டியர்... இட் இஸ் எ கிரேட் நியூஸ்!" என அவளைத்தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி கீழே விட்டான். அன்பாய், பிரியமாய், ஆசையாய், பாசமாய், காதலாய் அவளை ஏறிட்டு மென்மையான குரலில் மிருதுவாகக் கேட்டான்.

"உனக்கு என்ன வேண்டும் கேள் பாரதி. மிகப் பெரிதாகக் கேள். வாங்கித் தருகிறேன்..."

"எனக்குக் கிடைத்திருப்பதே பெரிதுதான்! அதை விடப் பெரிதான ஒன்று இந்த உலகத்தில் இல்லை!"

"பா..ர..தி..." உருகிக் கசிந்து அவளை இழுத்து மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டான்.

"நாம் உடனே சென்னை புறப்படுகிறோம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நம் திருமணத்தை முடித்துக் கொள்ள வேண்டும். நம் குழந்தை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட குழந்தையாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் பாரதி..."

**(தொடரும்)**

மினிதொடர்

# பாரதி கண்ணம்மா



"அம்மா.... எப்படி இருக்க...?"

"ஏய் பாரதி... நீ எப்படி இருக்கடீ..?"

"நல்லாருக்கம்மா... ரொம்ப நல்லாருக்கேன். அப்பா, கண்ணம்மா ரகு எல்லாம்...?"

"அப்பாதான் அதிகம் இருமுறாரு. உன் தங்கச்சி கண்ணம்மா பேங்க் வேலைக்குப் போறா... தம்பி ரகு பி.காம் படிக்குறான்."

"என்னம்மா... ஏதோ புதுசா வெளியாளுக்குச் சொல்ற மாதிரி சொல்ற...? நான்தான் வாரம் தவறாமல் போன் பேசுறேனே..."


"வயசாயிடுச்சில்ல... அதான் சொன்னதையே திரும்பச் சொல்றேன்."

"பெரிசா என்னம்மா வயசாகுது உனக்கு...?"

"ஏய்.. உனக்கே வயசு 24 ஆகுதடீ.... இந்த முறை நீ வந்தா கல்யாணத்தை முடிச்சுத்தான் அனுப்பணும்னு அப்பா தீர்மானமா இருக்காரு. நம்ம ஜாதிப் பையன்களைப் பத்தின விவரம், போட்டோ எல்லாம் சேகரிச்சு வச்சிருக்காரு. எல்லாத்தையும் காட்டி உனக்குப் பிடிச்ச பையனா முடிக்கணுமின்னு தினமும் பத்து தரமாச்சும் சொல்றாரு..."

அதைக் கேட்ட பாரதிக்கு அடிவயிறு கலங்கிற்று. 'ஜாதி இனம் என்றிருக்கும் அப்பாவிடம் ரிச்சர்ட் பற்றி சொன்னால் என்னவாகும்...?




2
இந்துமதி

மினிதொடர்

எப்படி எடுத்துக் கொள்வார்..?

"என்னடி பேசாமலிருக்க..?"

"ஒண்ணுமில்லம்மா..."

"சரி, எப்ப வர..?"

"நான் இப்ப இங்கதாம்மா இருக்கேன்."

"இங்கன்னா..?"

"இந்தியாவுல; சென்னைலம்மா..."

"என்னடீ சொல்ற..? எப்ப வந்த..?"


"எல்லாம் நேர்ல பேசிக்கலாம்மா... வச்சிடறேன்."

போனை வைத்த பின்னர்தான் அந்த அம்மாவிற்கு சுரீரென்று உறைத்தது, 'என்ன சொல்கிறாள் அவள்..? சென்னையில் இருப்பதாக அல்லவா சொன்னாள். சென்னை வந்தவள் ஏன் வீட்டிற்கு வரவில்லை? எங்கு தங்கியிருக்கிறாள். ஆபீஸ் வேலையாக வந்திருந்தால்கூட நேராக வீட்டிற்குத்தானே வரவேண்டும்...? இது என்ன வேண்டாத புதுப்பழக்கம்..?'

அந்த அம்மாளின் அடி வயிறு புரண்டது. அதன் பின் வேலையில் மனசு போகவில்லை. ஆய்ந்து கொண்டிருந்த கீரைக் கட்டை அப்படியே வைத்தாள். அடுப்பில் இருந்த குக்கரை விசில் சத்தம் வராமலே நிறுத்தினாள்.

எண்ணம் முழுதும் பாரதியிடமே போயிற்று. 'ஒரு வேளை பாரதி தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விடுவாளோ..? இருக்காது. நிச்சயமாக அப்படியெல்லாம் இருக்காது. ஏனெனில் பாரதி நல்ல பெண். தங்களின் கஷ்டம் தெரிந்த பெண், பட்டு நூலில் சாயம் தோய்த்து மாலைகள் செய்யும் அப்பாவின் வருமானம் அறிந்த பெண். தங்களிடமிருந்து ஒரு பைசா எதிர்பார்க்காது ஸ்காலர்ஷிப்பிலும், மெரிட்டிலும் பி.காம் பாஸ் செய்த பெண். அப்புறம் ஜாம்ஷெட்பூர் போய் எக்ஸ்.எல்.ஆர்.ஐ.ல் எம்.பி.ஏ முடித்த பெண். கேம்பஸ் இண்டர்வியூவில் தேர்வாகி மூன்றே மாதங்களில் லண்டனில் வேலைக்கு அனுப்பப்பட்ட பெண். கடந்த ஒன்றரை வருடங்களாக மாதம் தவறாமல் லட்ச ரூபாய்க்கு மேல் வீட்டிற்கு அனுப்பும் பெண். அப்படிப்பட்ட பெண்ணா தப்பு செய்யும்..? இருக்காது. பாரதியோ, கண்ணம்மாவோ தப்பு பண்ணவே மாட்டார்கள்...'

இருவரும் இந்த வீட்டில்தான் பிறந்தார்கள். இதே தெருவில் நடந்து பள்ளிக் கூடத்திற்கும், காலேஜுக்கும் போனார்கள். இதுநாள் வரை தலை நிமிர்ந்து யாரையாவது பார்த்திருப்பார்களா? யாருடனாவது அனாவசியமாகப் பேசிப் பழகியிருப்பார்களா..? இங்கு



பார்த்தோம், அங்கு பார்த்தோம் என்று யாராவது புகார் சொல்லியிருக்கிறார்களா...?

தன்னைத் தேற்றிக் கொண்டு முற்றத்திலிருந்து எழுந்து கூட்டத்திற்கு வந்து மணி பார்த்தாள் லக்ஷ்மிபாய். ஐந்தாகியிருந்தது. 'சாயந்திரமாக வரேன்' என்றாளே பாரதி. இப்போதே மணி ஐந்தாகி விட்டதே... ராத்திரிக்கு செய்ய நினைத்த கீரையையும், ரசத்தையும் தள்ளிப் போட்டாள். பாரதிக்கு பிரியாணி ரொம்பப் பிடிக்கும். ரகுவையோ இவரையோ விட்டு வாங்கி வரச் சொன்னால் என்ன...?

அந்தம்மாள் முடிவெடுத்தபோது ஷாயாஜிராவ் படியேறி வந்தார். களைப்பும், சோர்வுமாகக் காணப்பட்டார். 'பின்னால் போய் கை கால் முகம் கழுவிக் கொண்டு வரட்டும்'... என்று நினைத்த லக்ஷ்மிபாய் பேசாதிருந்தாள். கொடியில் இருந்த டவலை உருவிக் கொண்டு கொல்லைப்புறம் போனார் அவர். அவர் வருவதற்குள் காபி போடலாம் என லக்ஷ்மிபாய் சமையற்கட்டினுள் நுழைந்த சமயத்தில் கண்ணம்மாவும், ரகுவும் ஒன்றாக வீட்டுப் படியேறினார்கள். அவர்களும் வந்து விட்டதை கவனித்த அந்த அம்மாள் மூவருக்கும் காபி கலந்து கொண்டு போய் கொடுத்தபின் பாரதி பற்றி சொல்லலாம் என்று நினைத்தார்.

ஆனால் அதற்குள் வாசலில் பெரிதான படகு போன்ற கார் வந்து நின்றது. கார் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த கண்ணம்மாவின் முகமும், கண்களும் மலர்ந்தன. "அக்கா...!" என்று ஆச்சரியத்தோடு கூவினாள். "அம்மா... அக்காம்மா... அப்பா... அக்கா வந்திருக்காங்கப்பா..."

உள் அறையிலிருந்து ரகுவும், கொல்லைப்புறத்திலிருந்து ஷாயாஜிராவும் ஒரே சமயத்தில் கூடத்திற்கு வந்தார்கள்.

"யாரு... பாரதியா...? நம்ம பாரதியா..." முகம் மலர்ந்தவர் பாரதியின் பின்னால் உள்ளே

மினிதொடர்

நுழைந்த கறுப்பு மனிதனைக் கண்டதும் அவரது கால்கள் தயங்கின. ஆனால் ரகு பாரதியின் பின்னால் வந்தவனை அடையாளம் கண்டுகொண்டு விட்டான்.

'ஓ! சாலமன் ரிச்சர்ட்ஸ்...!

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டர்!

இவர் எங்கே இங்கு... அதுவும் நம் வீட்டுக்கு... நம் பாரதி அக்காவுடன்...!!?

ஓடிப் போய் ரிச்சர்ட் எதிரில் நின்றான் ரகு. முகம் பூவாக மலர்ந்திருந்தது. வாய் முழுதும் கொள்ளைச் சிரிப்பு. "பூ! நான் காண்பது கனவா இல்லை நனவா...? காட்...! இட் ஈஸ் அன்பிலீவபிள்...! பாரதியக்கா இவரை எப்படி நம்ம வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்தீங்க...?"

அதற்குள் கண்ணம்மாவிற்கும் அவன் யாரெனப் புரிந்து விட்டது. அவள் முகமும் மலர்ந்தது. ஆனால் ஷாயாஜிராவ் ஒரு வித கலவரத்துடனே மகளை ஏறிட்டார்.

"என்ன பாரதி திடீர்னு வரப்போறதா சொல்லவே இல்லையே?"....

"அம்மாவுக்கு போன் பண்ணி சொல்லியிருந்தேனே... சொல்லலையாம்மா நீ...?" - காபி கொண்டு வந்த லக்ஷ்மிபாயை பார்த்துக் கேட்டாள் பாரதி. லக்ஷ்மிபாயின் பார்வை கறுப்பு மனிதன் மீதே இருந்தது. வாய் தன்னிச்சையாக பதில் சொல்லிற்று.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால தானேடீ போன் பண்ணுன. இவங்க மூணு பேரும் உள்ள நுழைஞ்சு அஞ்சு நிமிஷம் கூட ஆகியிருக்காது. அதுக்குள்ளாற நீ வந்திட்ட..."

"சரிம்மா... பரவாயில்ல...அப்பா இவர் சாலமன் ரிச்சர்ட்ஸ். வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் பிளேயர்..."


"ரொம்ப நல்ல பிளேயர்ப்பா. எக்ஸலெண்ட் போலர். இது ரெண்டையும் விட அட்டகாசமான டான்ஸர். விக்கெட் எடுத்தாருன்னா... ஃபீல்டுல இவர் ஆடுற டான்ஸுக்கு நாங்கள்லாம் தீவிரமான ரசிகர்கள்ப்பா..." - ரகு புகழாரம் சூட்டினான்.

"நமஸ்தே! எனக்கு கிரிக்கெட் பத்தியெல்லாம் ஒண்ணும் தெரியாது.

"பதுங்கு குழியை ஏன் இவ்ளோ பெருசா தோண்டினே?"

"இது பட்டத்து யானை பதுங்குவதற்காக தோண்டியது."

-அதிரைபுகாரி



பட்டு நூலும், மாலை கோர்க்கவும் மட்டும்தான் தெரியும்" என்றவாறே கை கூப்பினார் ஷாயாஜிராவ். அவன் பதிலுக்குக் கை நீட்டினான். ரிச்சர்ட்டின் நீட்டிய கையைப் பற்றி குலுக்கியது ரகுதான்.

'டி-20 விளையாட வந்திருக்கீங்களா? மேட்ச்சுக்கு இன்னும் நாலு நாள் இருக்குதே..' என்று திக்குமுக்காடிய போது, லக்ஷ்மிபாய் அவர்கள் இருவருக்கும் சேர்த்து காபி கொண்டு வந்தாள். காபி டம்ளர்களை வைக்க வசதியாக டீபாயை நகர்த்திப் போட்ட கண்ணம்மாவை அறிமுகப்படுத்தத் தொடங்கினாள் பாரதி.

"எனக்கு அடுத்த தங்கை. பேரு கண்ணம்மா. இவன் ரகு. என் தம்பி, சரியான கிரிக்கெட் பைத்தியம். இவங்க அம்மா, லக்ஷ்மிபாய்னு பேர். அப்பா ஷாயாஜிராவ்."

அறிமுகப்படலம் முடிவதற்குள் ரிச்சர்ட் நன்கு கை கூப்ப கற்றுக் கொண்டு விட்டான்.

"பாரதியக்கா.. நான் போய் என் ஃபிரெண்ட்ஸ் எல்லாரையும் கூட்டிக்கிட்டு வரேங்கா.. அப்புறம் இவரு நம்ம வீட்டுக்கு வந்திருந்ததா சொன்னா நம்ப மாட்டாங்கக்கா.."

"இருடா.. ஃபிரெண்ட்ஸுக்கு அப்புறமா சொல்லலாம்.."

நண்பர்கள் மத்தியில் தன்னை ஹீரோவாக காட்டிக் கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பம் நழுவிப் போன வருத்தத்தில் அவன் முகம் வாடிற்று.

"சரிக்கா.. நான் போய் காரிலிருந்து உன் சூட்கேஸை எடுத்துக்கிட்டு வரேன்."

"சூட்கேஸ் எல்லாம் ஓட்டல் ரூம்லயே இருக்குதுடா.."

"ஓட்டல் ரூமா..?" லக்ஷ்மி பாய் அதிர்ந்து போய் பாரதி முகத்தை ஏறிட்டாள்.

"ஆமாம்மா.. இவரோட நான் ஓட்டல் ரூம்லதான் தங்கியிருக்கேன்.."

"ஒண்ணாவா..?"

"ஆமாம்மா.. ஆறு மாசமா ஒன்னாத்தான் வாழுறோம். நான் என் வேலையை ராஜினாமா செய்திட்டு இவர் கூடவே போய்க்கிட்டிருக்கேன்."



"ஒன்னா வாழுறியா..? என்னங்க சொல்றா இவ..?" கலவரத்தோடு கணவரை

மினிதொடர்

ஏறிட்டாள் அந்த அம்மாள். தாய் மனம் அறுந்து போன பல்லியின் வாலாகத் துடித்தது. 'சற்று முன் பாரதியால் எந்தப் பிரச்னையும் வராது என்று நினைத்தோமே... அவளா இப்படி...?

ஷாயாஜிராவ் வாயடைத்து நின்றார். விநாடி நேரம் ஒன்றும் பேசவில்லை. அதிர்ச்சியினால் பலமாகத் தாக்கப்பட்ட வலியும், வேதனையும் முகத்தில் தெரிய மூத்த மகளை ஏறிட்டார்.

"என்னம்மா சொல்ற நீ...?"

**"இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும்!"**

"சுற்றி வளைத்துப் பேச நான் இஷ்டப்படலைப்பா. நானும் ரிச்சர்ட்டும் ஒருத்தரை ஒருத்தர் மனசார நேசிக்கிறோம். ரிச்சி சாதாரணமானவர் இல்லை. உலகம் போற்றும் கிரிக்கெட் வீரர். உங்களுக்கு கிரிக்கெட் பற்றி ஒன்றும் தெரியாததால் இவரைப் பற்றி தெரியவில்லை. ரிச்சி ரொம்ப நல்லவர்... அற்புதமான மனிதர். இவரை மாப்பிள்ளையாக அடைய நீங்கள் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!"

ஆடிப் போனார் பெற்றவர். தான் கட்டினவளை ஏறிட்டுப் பார்த்தார். இளைய மகனை நோக்கினார். அவர்கள் இருவரும் ஸ்தம்பித்து நிற்பது புரிந்தது. மகன் பக்கம் திரும்பிய போது அவன் பரவசப்பட்டுக் கிடப்பதை உணர்ந்தார். பின் மூத்தவளிடம் கேட்டார்.

"நான் இதுக்கு சம்மதிக்கலேன்னா...?"

"உங்க சம்மதத்தோடு கல்யாணம் நடக்கணும்னுதான் இத்தனை ஆயிரம் மைல்கள் தாண்டி வந்திருக்கோம். எப்படியிருந்தாலும் இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும்! என் வயிற்றில் இருக்கும் இவரது குழந்தை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட குழந்தையாக இருக்க வேண்டும் என்பது ரிச்சியின் ஆசை... அதனால்தான் இதுவரை மீடியாக்கள் எதற்கும் தெரியாது கட்டிக் காப்பாற்றி வந்ததை முதலில் உங்களிடம் சொல்ல வேண்டும் என்று ஓடி வந்திருக்கிறோம்..."

நடுக்கூடத்தில் நின்று நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்த மாதிரி பேசிய மகளைப் பார்த்தவாறு அப்படியே நின்றிருந்தார் அவர்...

**(தொடரும்)**




**பாரதி சொன்னதைக் கேட்டு பேசாது அப்படியே நின்றாலும் ஷாயாஜிராவின் உடம்பு ஒரு முறை உதறிற்று. நெஞ்சு ஏறி இறங்கிற்று. மனசு பதறியது. 'பாரதிதானா இவள்...? நான் பெற்று வளர்த்த பெண்ணா...? எதிரில் நின்று ஒரு வார்த்தை பேசத் தயங்குபவள் இன்று எப்படிப் பேசுகிறாள்...?**
எத்தனை தைரியமாகக் கூறுகிறாள்...? திருமணமாகாமல் கர்ப்பமாக இருப்பதை நடுக் கூடத்தில் நின்று தாய், தகப்பன் மட்டுமின்றி தனக்குப் பின்னால் பிறந்த தம்பி, தங்கையை வைத்துக் கொண்டு சிறிது கூட கூச்சமின்றி போட்டு உடைக்கிறாளே.... இதற்கு எப்படி மனசு வந்தது...? எது கொடுத்த தைரியம்...? யார் கொடுத்த தைரியம்...? படிப்பா... வெளிநாடு சம்பாத்தியமா...? இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவனை தன்னுடன் அழைத்து வந்து நடுக் கூடத்தில் உட்கார வைத்து உலகப் புகழ் பெற்றவன் என்கிறாளே... ரகுவேறு சந்தோஷமும், உற்சாகமுமாக அவனது கை பற்றி குலுக்குகிறானே....

# பாரதி கண்ணம்மா

இந்துமதி

3



நிச்சயமாய் பாரதியின் இந்த தைரியம் அவனது பேரும், புகழும் கொடுத்ததாகத்தான் இருக்க வேண்டும். இதற்கெல்லாம் மேலாக வேலையை ராஜினாமா செய்து ஆறு மாதங்களாகிறது என்றாளே... இந்த ஆறு மாத காலமும் அவள் வீட்டிற்கு அனுப்பி வைத்த பணம் அவனுடையதாக இருக்குமோ...?இருக்குமோ என்ன..? அவனுடையதுதான். ஒரு பைசா தொடாமல் பேங்க்கில் போட்டு வைத்தது நல்லதாய் போயிற்று...'

நினைத்து நினைத்து அவர் உள்ளுக்குள் புழுங்கித் தவித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் குறுகிய தெருவில் தொலைக்காட்சி சானல்களின் பெரிய வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து நின்றன.

ஏற்கெனவே நொடிந்து போயிருந்த லக்ஷ்மிபாயும், ஷாயாஜிராவும் தங்களை புகைப்படங்களிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு கூடத்தை விட்டு கொல்லையின் கிணற்றடிக்குத் தஞ்சம் புகுந்தனர். போனபோது மறக்காமல் கண்ணம்மாவின் கைபற்றி இழுத்துக் கொண்டு போனார் லக்ஷ்மிபாய்.

"மரம் மாதிரி நிக்குறியே... எங்ககூட வரணுமின்னு தோணலையா...? உனக்காவது நாங்க நல்லபடி கல்யாணம் செய்து வைக்க வேணாம்? டிவியிலும், பத்திரிகையிலும் உன் பேரும், போட்டோவும் அடிபடணுமா என்ன...?" என்று பாரதி மீது காட்ட முடியாத கோபத்தையும், வருத்தத்தையும் கண்ணம்மா மீது காட்டினாள். சில மணி நேரத்திற்குள் வீடும், வாசலும் மாறிப் போயிருப்பது கண்டு மிகுந்த வேதனையுடன் கணவனிடம் கேட்டாள்.

"என்ன செய்யப் போறீங்க...?"


"வேறு என்ன செய்ய முடியும்? நாம பெத்த பொண்ணுக்கு

> **ரிச்சர்ட் மாதிரி பிளேயரை கட்டிக்க அக்கா கொடுத்து வைச்சிருக்கணும்!**

நம்மள முந்திக் கிட்டு பத்திரிகைக்காரங்களும், டிவி. சேனல்காரங்களும் கல்யாணம் செய்து வச்சிட்டாங்க. ஊர், உலகம் முழுசும் விளம்பரப்படுத்திட்டாங்க. இதுக்கப்புறம் நாம பேசாம இருக்க முடியுமா? கல்யாணம் செய்து வச்சிட வேண்டியதுதான்!"

அதற்குமேல் பேச ஒன்றுமில்லை என்கிற முடிவில் அந்த அம்மாள் வாயை மூடிக் கொண்டாள். ஃப்ளாஷ்கள் மின்னி ஓய்ந்து, வீடியோ கேமராக்களின்

ஒளி வெள்ளம் அணைந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் குறைந்து வீடு முற்றிலும் அமைதியடைய இரவு மணி பதினொன்றாகி விட்டது. போன போது பத்திரிகைக்காரர்களும், மீடியாக்களும் பிரஸ் கான்ஃபிரன்ஸுக்காக பாரதியையும் ரிச்சர்ட்ஸையும் உடன் அழைத்துச் சென்று விட்டதனால் வாயிற் கதவைத் தாழிட்டுக் கொண்டு பின்பக்கம் வந்தான் ரகு. அப்பா, அம்மா, கண்ணம்மா மூவரும் ஆளுக்கொரு பக்கம் அமர்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.



"என்னப்பா... இங்க வந்து உக்காந்திட்டிருக்கீங்க..?"

"அங்க நீதான் பெரிய மனுஷனாட்டம் நின்னு எல்லாருக்கும் பதில் சொல்லிக்கிட்டிருந்தியேடா?"

"அதில்லப்பா..... நீங்க எல்லாரும் அக்காவ தனியா விட்டுட்டு வந்திட்டீங்க. பாவம் அக்கா.. உங்களைப் பத்தி மீடியாக்காரங்க கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாம சங்கடப்பட்டுக் கிட்டிருந்தாங்க. அதனாலதான் நான் உங்க சார்புல பதில் சொன்னேன்..."

"அதான் கேட்டுக் கிட்டிருந்தோமே.. சந்தோஷப்படுகிறேன்; பெருமைப்படுறேன் னெல்லாம் சொல்லிக் கிட்டிருந்தியே.."

அவன் பேசாதிருந்தான்.

"டி.வி.காரங்களுக்காக அப்படிச் சொன்னியாடா ரகு..?" - இந்த விஷயத்தில் முதல் முறையாகக் கண்ணம்மா வாய் திறந்தாள்.

"இல்ல கண்ணம்மாக்கா... நெஜமாவே ஃபீல் பண்ணித்தான் சொன்னேன்."

"அப்படியா..?"

"ஆமாக்கா... ரிச்சர்ட்ஸ் மாதிரி ஒரு பிளேயரைக் கட்டிக்க பாரதியக்கா ரொம்பக் குடுத்து வச்சிருக்கணுமில்ல..?"

கண்ணம்மா அமைதியா இருந்தாள். ரகு தானாகவே தொடர்ந்தான்.

"நம்ம வீட்டுக்கு அவரு மாப்பிள்ளையா வர்றதெல்லாம் எங்கேயாச்சும் நடக்கக் கூடிய விஷயமா..? சினிமாவுலயும், கதையிலயும் தான் இதெல்லாம் நடக்கும். பாரதியக்கா நிஜமாக்கிக்

காட்டியிருக்காங்க... இல்லாட்டி நானெல்லாம் எங்கிருந்து டிவில வரப்போறேன்? ஓவர்நைட்ல பாரதியக்கா என்னையும் பாப்புலராக்கிட்டாங்க. நாளைக்கு காலேஜ்ல நான்தான் ஹீரோ... சும்மா காலரைத் தூக்கி விட்டுக்கிட்டு நடப்பேனில்ல..."

"போறும்டா! நிறுத்திக்க. உங்க பாரதியக்காவுக்கு போன் போட்டு அப்பா கல்யாணத்துக்கு நாள் குறிக்கிறாராம்னு சொல்லிடு..."

"சரிப்பா... உள்ள போனதும் சொல்லிடறேன். எந்திரிச்சு வாங்க..."

உள்ளே வந்ததும் ரகு ஓட்டல் அறையைக் கூப்பிட்டு சொன்னான்.

"பாரதியக்கா... அப்பா உன் கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டாரு. நாளைக்கே நாள் பார்க்குறாராம்..."

"ரொம்ப சந்தோஷம்பா... அப்பா பக்கத்துல இருக்குறாரா...?"

"இருக்காருக்கா..."

"போனைக் குடுடா..."

"பாரதியக்கா பேசணுமாம்." - மொபைல் போனை நீட்டினான். வாங்கி "ஹலோ..." என்றார் அவர்.

"ரொம்ப தாங்க்ஸ்ப்பா..."

"நான் என் கடமையைத்தான் செய்யப் போறேன். சீக்கிரமே முகூர்த்தத்தை ஃபிக்ஸ் பண்ணிடறேன். அதுவரை ஓட்டல்ல தங்க வேணாம். நீ மட்டும் வீட்ல வந்து தங்கிக்க..."

"சரிப்பா..."

அவர் போனைத் துண்டித்ததும் லக்ஷ்மி பாய் கேட்டாள்.

"ஏங்க...? பணத்துக்கு என்ன செய்யப் போறீங்க...?"

"ஆமா... நாம சீர் செய்து வாங்கிக்குற நெலமைலயா அவ இருக்கா...? என்ன கேள்வி கேக்குற...? அவ அனுப்புன பணமே பனிரெண்டு லட்சமோ, பதினைஞ்சு லட்சமோ பாங்க்குல அப்படியே இருக்குது..."

ஓட்டல் அறையில் அதிசந்தோஷமாகவும், உற்சாகமாகவும் அந்த நாளைக் கொண்டாடினான் ரிச்சர்ட்ஸ். ஷாம்பெய்ன் பாட்டிலைத் திறந்து நுரையை வழிய விட்டுக் கொண்டே பாரதியைப் பார்த்து கூறினான். "இது நம் திருமணத்திற்காக ஹனி..." அவளை அணைத்து மென்மையாக உதட்டில் முத்தமிட்டான்.

"ரிச்சி... என் தாய், தந்தை எதிரிலோ தங்கை, தம்பி எதிரிலோ நீ என்னை இப்படி கட்டி அணைப்பதோ, முத்தமிடுவதோ கூடாது..."

"ஏய்... ஓய் நாட்? நான் எனக்கு மனைவியாகப் போகிறவளைத்தானே அணைத்து முத்தமிடுகிறேன்..."

"இதெல்லாம் இங்கு



வழக்கமில்லை. இவையெல்லாம் இங்கு படுக்கை அறைக்குள் மட்டுமே நிகழ வேண்டிய அந்தரங்கமான விஷயங்கள். நான்குபேருக்கு மத்தியில் நடந்தால் அசிங்கம் எனக் கருதுவார்கள்...."

"மைகாட்! அன்பை வெளிப்படுத்துவது அசிங்கமா...?"

"ரிச்சி. இந்திய மக்கள் தொன்மையான கலாச்சாரம் மிகுந்தவர்கள். குறிப்பாக தமிழ்நாட்டுப் பண்பாடும், பாரம்பரியமும் மிக மிகப் பழமையானவை...."

"ஆனால் நீதான் தமிழ்நாட்டுப் பெண் இல்லையே..."

"ஏய்... எங்கள் மராத்தியக் கலாச்சாரத்தை சாதாரணமாக நினைத்து விடாதே! கும்பி போடும் பழக்கம் தமிழ்நாட்டுப் பெண்களுக்குக் கிடையாது. ஆனால் எங்களுக்கு உண்டு..!"

"கும்பி என்றால் என்ன பாரதி..?"

"அது ஒரு வகை முகத்திரை..."

"ஓகே... ஓகே... அதற்காக நீ கும்பியெல்லாம் போட்டுக் கொண்டு விடாதே. உன் அழகான முகத்தைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. கூடுமானவரை உன்னைத் தொடாமல் இருக்க முயற்சி பண்ணுகிறேன். என்னையும் மீறி தொட்டு விட்டேன் என்றால் அது என் தவறு மட்டும் இல்லை பெண்ணே. உன் தவறும் கூடத்தான்..." என்று கூறி மிக அழகாக வெள்ளையாய்ச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பில் உள்ளம் பறிபோக மிகுந்த காதலுடன் அவனை ஏறிட்டாள் அவள்.

"அது எப்படி என் தவறு ஆகும்..?"

"பிகாஸ்... யு ஆர் ஸோ இர்ரெஸிஸ்டபிள்!" என்று, அவளை மென்மையாய் அணைத்துக் கொண்டே சொன்னான்.

"எனக்கு உன் வீடு மிகவும் பிடித்திருக்கிறது. ரொம்ப எளிமையாக இருக்கிறது. அந்த எளிமையிலும் மிகச் சிறந்த

பாதுகாப்பு தெரிகிறது. நாளைக்கு நாம் உன் வீட்டுக்குப் போகிறோம் அல்லவா...?"

"நாம் இல்லை. நான் மட்டும்!"

"தனியாகவா...? என்னை இங்கு விட்டு விட்டா...?"

"ஆமாம்!"

"நாம் இதுவரை இப்படிப் பிரிந்து இருந்ததில்லையே..."

"இப்போது இருக்க வேண்டிய சூழ்நிலை; கட்டாயம்...!"

"போகலாமா? ரொம்ப டயர்டாக இருக்கிறது..."


"இன்னும் ஒரே ஒரு விஷயம் ஹனி..."

"சொல்லு ரிச்சி...?"

"கல்யாணத்திற்கு ஆகும் முழுச் செலவையும் நாம்தான் ஏற்றுக் கொள்கிறோம். அனாவஸ்யமாக உன் பெற்றோரை கஷ்டப்படுத்தக் கூடாது. எளிமையான நல்ல மனிதர்கள் அவர்கள்..."

"சரி ரிச்சி..."

"கூடுமானவரை உன்னைத் தொடாமலிருக்க முயற்சி செய்கிறேன். அதையும் மீறி..."



"உன் அப்பா சொன்னாரா...?"

"ஆமாம்!"

"எது வரை?"

"கல்யாணம் முடியும் வரை..."

"ஓ! இதுவும் உங்கள் கலாச்சாரமா...?"

"ஆமாம்!"

"தமிழ்நாட்டுக் கலாச்சாரமா...?" மராத்தியக் கலாச்சாரமா...?"

"இந்தியக் கலாச்சாரம்!"

"ஓ.கே. ஹனி. உங்களையும், உங்கள் கலாச்சாரத்தையும் நான் மதிக்கிறேன்".

"தேங்க்யு ரிச்சி. படுக்கப் போகலாமா? ...

"உங்கள் கல்யாணம் எப்படி நடக்குமென தெரியாது. ஆனால் மிகவும் சிக்கனமாக ஸிம்பிளாக நடந்தால் போதும். ரிசப்ஷனை ஆடம்பரப்படுத்தி விடலாம். என்ன சொல்கிறாய்?"

"உன் விருப்பம்தான் என் விருப்பம்!"

"வா ஹனி. இப்போது தூங்கப் போகலாம்... எனக்கும் களைப்பாக இருக்கிறது."

"குட் நைட் ரிச்சி..."

"குட் நைட் ஹனி..."

**(தொடரும்)**

மினி தொடர்

# பாரதி கண்ணம்மா

எண்ணி ஏழாவது நாள். கல்யாணத்திற்கு நாள் குறித்து விட்டார் ஷாயாஜிராவ். அத்தனை குறுகிய அவகாசத்தில் திருமணச் சத்திரங்களோ, கோயில் மண்டபங்களோ கிடைக்கவில்லை. எல்லாம் எட்டு மாசம், ஆறு மாசத்திற்கு முன்பாகவே பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் சாலமன் ரிச்சர்டின் திருமணம் என்பதால் பெரிய பெரிய தொழில் அதிபர்கள் போட்டி போட்டுக் கொண்டு தங்களின் அரண்மனை போன்ற பங்களாக்களைத் தரத் தயாராக இருந்தனர். அப்போது தான் ஷாயாஜிராவிற்கு தனக்கு வந்திருப்பது சாதாரண மருமகனில்லை என்பது புரிந்தது. இத்தனைக் கோடீஸ்வரர்களும் அவனுக்காக தாங்கள் வசிக்கும் இடங்களை ஒதுக்கித் தருகிறார்கள் என்றால் சாமானியனா அவன்!

எந்த உறவினர்களை நினைத்து பயந்தாரோ, அத்தனைப் பேரும் வந்து தங்களின் சந்தோஷத்தை வெளிப்படையாகவும், மனப்பூர்வமாகவும் தெரிவித்துவிட்டுப் போனதில் மனதிற்குள் 'அப்பாடா'




இந்துமதி



என்கிற நிம்மதி ஏற்பட்டது. தன் வீடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு வீட்டிலும் வாழை மரம், தென்னங்குருத்து, மாவிலைத் தோரணங்கள் கட்டச் செய்தார். வட்டாரமே திருவிழாக் கோலம் பூண்டதைப் பார்த்து லக்ஷ்மிபாய் ஆச்சரியப்பட்டாள்.

"ஏங்க... தெருவும், சொந்தக்காரங்களும் நம்மள வழிச்சு வாரி சிரிக்கப் போவுதுன்னு நினைச்சு பயந்துக் கிட்டிருந்தா... இப்படி கொண்டாடுறாங்க."

**"கல்யாணத்த முடிச்சுட்டுப் போயி அவ நல்லா இருக்கட்டும்க.**



"எல்லாம் நம்ம மாப்பிள்ளை கிரிக்கெட் வீரர்ங்குற காரணம் தான்."

"அதுக்குள்ள அவரு மாப்பிள்ளை ஆயிட்டாருங்களா...?"

"இன்னும் ரெண்டு நாள்ல ஆகப் போறவருதானே...? அவரு மட்டும் இவ்வளவு பெரிய ஆளா இல்லன்னு வச்சிக்க... நம்மள மிதிச்சு துவைச்சு நாற அடிச்சிருப்பானுங்க. வார்த்தைகளால கொன்னு நார் நாராக் கிழிச்சுப் போட்டிருப்பானுங்க..."

"நீங்க சொல்றது வாஸ்தவமான பேச்சுங்க. நம்மால வெளிய தல காட்ட முடியாமப் போயிருக்கும். நம்ம இனத்தவங்களே நம்மள கடிச்சுக் குதறியிருப்பாங்க. இப்போ அந்த மாதிரி எந்த சங்கடமுமில்ல. கல்யாணத்த முடிச்சுக்கிட்டுப் போயி அவ நல்லா இருக்கட்டும்ங்க..."

"ஏது... விட்டா பொண்ணு பிரசவத்துக்கு உதவி செய்யுறேன்னு பிளேன் ஏறிடுவபோல இருக்குதே!"

"கூப்ட்டாங்கன்னா போக வேண்டியதுதான். அதுக்காக அப்படியே உதறிவிட்டுட முடியுமா...?"

பெற்றவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணம்மாவிற்கு பாரம் குறைந்த மாதிரி இருந்தது. மாற்றங்களை ஏற்றுக் கொள்ள இருவரும் தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டு விட்டதாக நினைத்து சந்தோஷப்பட்டாள். அதில் தன் சுயநலமும் கலந்திருப்பதை உணர்ந்தே இருந்தாள். அக்கா தனக்கு வழி வகுத்துக் கொடுத்துவிட்ட நிம்மதியில்

‘‘அரசே! நீங்கள் இனிமேல் இளவரசரை துணிந்து போருக்கு அனுப்பலாம்!’’

‘‘எதை வச்சுச் சொல்கிறீர்?’’

‘‘சமீபத்தில் நடந்த ஓட்டப் பந்தயப் போட்டியில் நம் இளவரசர்தான் முதல் பரிசு வாங்கியிருக்கார்!’’

-என்.கிருஷ்ணமூர்த்தி



அவளாலும் இயல்பாகக் கல்யாண வேலைகளில் ஈடுபட முடிந்தது.

பெரிய மனிதர்களின் தலையீட்டிற்குப் பின்னர் கிடைத்த கபாலீஸ்வரர் கோயில் மண்டபத்தில் நெருங்கிய உறவினர்களோடு மட்டும் முகூர்த்தம் மிக எளிமையாக நடைபெற்றது. பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் அணிந்த ரிச்சர்ட் குழந்தை மாதிரி குதூகலப்பட்டான். கெட்டி மேளத்தையும், ஹோமப்புகையையும், மந்திர ஒலிகளையும் வெகுவாக ரசித்து அனுபவித்தான். முகூர்த்த நேரத்தில் பாரதி கழுத்தில் கருகு மணியில் சேர்க்கப்பட்ட பொட்டுத் தாலி அணிவித்துவிட்டு கைதட்டி மகிழ்ந்தான்.

அமைதியாகத் திருமணமும், ஆர்ப்பாட்டமாக வரவேற்பும் நடந்து முடிந்த மறுநாள் இரவு இருவரும் விமானமேறினர். குடும்பமே போய் கையசைத்து வழியனுப்பி வைத்து விட்டுத் திரும்பியது.

“போதும்டா சாமி. சுனாமி வந்த மாதிரி ஆயிடிச்சு.” என்றவாறே ஷாயாஜிராவ் ஈஸிச் சேரில் சாய்ந்தார்.

“என்னவோ. எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடுச்சு.” என்ற லக்ஷ்மிபாய் தரையில் ஒருக்களித்துப் படுத்து, இடது கையை மடித்து, தலையின் கீழ் வைத்து நிம்மதியாகக் கண்களை மூடிக் கொண்டாள்.

ஒரு வார விடுப்பிற்குப் பின்னர் அன்று காலை வங்கிக்குள் நுழைந்த கண்ணம்மாவின் கண்கள் முதலில் மாணிக்கத்தைப் பார்க்க பரபரத்தன. அவனது தனி அறைக்குள் கம்ப்யூட்டரில் எதையோ தேடிக் கொண்டிருந்தவன் முன்னால் போய் நின்றாள் அவள்.

“ஏய். வந்திட்டியா.?”

“வராம எங்க போயிடுவேன்.?”

“ஒரு வேளை அக்கா கூடவே ஃபிளைட் ஏறிட்டியோன்னு

நினைச்சேன்..."

"நீங்க இங்க இருக்குறபோது நான் ஏன் தனியா ஃபிளைட் ஏறுறேன்... ஆமா, கல்யாணத்துக்கு யாரையும் கூப்பிடல. அதனால உங்களையும் கூப்பிடல. ரிசப்ஷனுக்கு வரச் சொல்லி எத்தனை முறை கூப்ட்டேன். ஏன் வரல..?"

"நானெல்லாம் வரக்கூடிய ரிசப்ஷனா அது.. அங்கே என்னை யார் சீந்துவாங்க?"

"என்ன மாணிக்கம் இப்படிப் பேசுறீங்க? உங்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து என் கண்ணுரெண்டும் பூத்துப் போயிடுச்சு.."

"இல்ல கண்ணம்மா... அந்த மாதிரி கோடீஸ்வர கும்பலுக்கெல்லாம் வர நான் தகுதியானவனில்லை."

"சரி; அத விடுங்க. நான் உங்களுக்குத் தகுதியானவதானே..? நீங்க எனக்குத் தகுதியானவர் தானே..? அப்படி நினைச்சுத்தானே ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சோம்?"

"ஆமாம்; ஆனால்... இப்போ..."

"திடீர்னு இப்போ என்ன வந்திடுச்சு..?" அவன் மௌனமாய் தலைகுனிய, அவள் சற்று கோபத் தோடு தொடர்ந்தாள்.

"எதுக்காக இந்தத் தாழ்வு மனப்பான்மை? எங்கக்கா ராஜபாட்டை போட்டுக் கொடுத்திட்டுப் போயிருக்காளேன்னு நான் ரொம்ப சந்தோஷப்படுறேன். நாம் நம்ம காதல் வாகனத்தை அதுல சுலபமா ஓட்டிக்கிட்டுப் போயிடலாம்னு நினைச்சு நிம்மதி அடையுறேன். நான் பாஸிட்டிவ்வா நினைக்குற விஷயத்தை நீங்க ஏன் நெகட்டிவ்வா எடுத்துக்கறீங்க?"

## “அக்காவுக்கு ஒரு நியாயம் தங்கச்சிக்கு ஒரு நியாயமா?

அவன் சற்று குழப்பத்தோடு அவளை ஏறிட்டான்.

"ஏன் அப்படி பார்க்குறீங்க..? வெஸ்ட் இண்டீஸ் கறுப்பரை மாப்பிள்ளையா ஏத்துக்கிட்ட எங்கப்பா தமிழ்நாட்டுக் கறுப்பரான உங்களை ஏத்துக்க மாட்டாரா என்ன..? கறுப்புன்றது வெறும் நிறம்தாங்க. அதுல அந்தக் கறுப்பு ஒஸ்தி, இந்தக் கறுப்பு தாழ்த்தி என்பதெல்லாம் கிடையாது. யார் என்ன நிறமாக இருந்தாலும் எல்லார் உடம்பிலும் ஓடுறது சிவப்பு நிற ரத்தம்தாங்க. அதுல ஏதாவது மாற்றம் இருக்குதா சொல்லுங்க."

"ஐயம் ஸாரி கண்ணம்மா..." என்று தலைகவிழ்ந்தான் அவன்.

“இதோ பாருங்க. சூட்டோடு சூடாக நாமும் நம்ம கல்யாணத்தை முடிச்சுக்கிடுவோம். ஆகவே தைரியமா வீட்டுக்கு வந்து பொண்ணு கேளுங்க..”

“குடுப்பாங்கன்னு நினைக் கறியா?”

“குடுக்காட்டி போனா நான் சும்மா விட்ருவேனா..? அக்காவுக்கு ஒரு நியாயம் தங்கச்சிக்கு ஒரு நியாயமா..? ஒரு கண்ணு வெண்ணை இன்னொரு கண்ணு சுண்ணாம்பான்னு பேயாட்டம் ஆடிட மாட்டேன்..”



“சரி; ஞாயிற்றுக்கிழமை வரேன்!”

சொன்னது போல் ஞாயிற்றுக் கிழமை மாலை வெற்றிலை, பாக்கு, பூ பழத்துடன் மாணிக்கம் வந்தான். ரகுவை ஏறிட்டு, “தம்பி ஒரு தட்டு கொண்டு வரீங்களா..?” எனக் கேட்டான். ரகு கொண்டு வந்த எவர்ஸில்வர் ட்ரேயில் எல்லா வற்றையும் வைத்து ஷாயாஜி ராவிடம் நீட்டினான். வாங்கிக் கொண்ட அவர், “யாரு தம்பீ நீங்க..? எதுக்கு இதெல்லாம்..?” எனப் புரியாமல் தடுமாறினார்.

“என் பேர் மாணிக்கம். கண்ணம்மா வேலை செய்யுற அதே பாங்குல அக்கௌண்ட்ஸ் மானேஜரா இருக்கேன். நானும் கண்ணம்மாவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறோம். பெரியவங்க நீங்கதான் கல்யாணம் செய்து வைக்கணும்!”

மறுவிநாடி உட்கார்ந்திருந்த நாற்காலி விட்டு சரேலென்று எழுந்து கொண்டார் ஷாயாஜிராவ். அவரது முகமும் கண்களும் சிவந்து போயின. உடம்பு நடுங்குவது வெளிப்படையாகத் தெரிந்தது. அவனிடமிருந்து வாங்கிய தட்டை அவன் முகத்திற்கு நேராக வீசி எறிந்தார்.

அவன் சட்டையைப் பற்றியவர், “டேய்.. என்னடா நினைச்சுக்

## மினி தொடர்

கிட்டிருக்கீங்க நீங்கல்லாம்..? என்னை இளிச்சவாயன்னு நினைச்சீங்களா? இல்ல, ஒரு மராத்திக்காரனுக்கு தமிழ்நாட்ல யார் ஆதரவு கொடுப்பாங்கன்ற தைரியமா..?" என சட்டையைப் பிடித்து, இழுத்துத் தள்ள முயன்றபோது உள்ளே காபி கலந்து கொண்டிருந்த கண்ணம்மா ஓடிவந்து தடுத்து அவன் சட்டையிலிருந்து அப்பாவின் கையைப் பிரித்து அகற்றினாள். அவரை ஏறிட்ட அவளது முகம் செக்கச் செவேலென்றிருந்தது.

"ஏம்ப்பா.. இது உங்களுக்கே சரியாப்படுதா..? நியாயமான முறைல பொண்ணு கேட்டு வந்தவரை இப்படியா அவமானப்படுத்துவீங்க? மேற்கு இந்தியக் கறுப்புன்னா ஏத்துக்குவீங்க.. அதே தமிழ்நாட்டு கறுப்புன்னா... கழுத்துப் புடிச்சு வெளிய தள்ளுவீங்களா..?" ஷாயாஜி ராவ் அவளை முறைத்துப் பார்த்தார்.

"இந்த முறைப்பெல்லாம் வேணாம்ப்பா.. இதுக்கு பயப்படும் நிலைமைல நான் இப்ப இல்லை. இவரு என்ன தப்பு செய்தாருன்னு சட்டையைப் புடிச்சீங்க?"

அவர் அமைதியாய் தலைகுனிய, ரகு குறுக்கிட்டான்.

"அப்பா செய்தது என்ன தப்பு? கண்டவனெல்லாம் வீட்டுக்குள்ள நுழைஞ்சு பொண்ணு கேப்பான். பார்த்துக்கிட்டு அவரை சும்மா இருக்கச் சொல்றியா..?"

"அடி செருப்பால!" என்று ரகுவின் பக்கம் திரும்பினாள். "நீ ஏண்டா பேசமாட்ட..? அன்னிக்கு டிவி.காரங்க, பத்திரிகைக்காரங்க கிட்டல்லாம் 'ஐயம் ஹேப்பி, ஐ ஃபீல் கிரேட்'டுன்னு பெருமைப் பட்ல நீ..?"

"பாரதியக்கா கூட்டிக்கிட்டு வந்தவரு எங்கே.. இந்த ஆள் எங்கே..? அவரு உலகம் புகழும் கிரிக்கெட் வீரர், இவரு ஒரு சாதாரண பேங்க்கில அக்கவுண்ட்ஸ் மானேஜர்."

"போதும் நிறுத்துடா.. இனி ஒருத்தரும் அவரைப் பத்தி ஒரு வார்த்தை பேச வேண்டாம். பேசுற தகுதி யாருக்குமில்ல.." என்று நேரிடையாக ஷாயாஜிராவ் பக்கம் திரும்பினாள்.

"புரியுதுப்பா.. எனக்கு உங்க நிலைமை நல்லாவே புரியுது. ஓஹோன்னு நடந்த அந்தக் கல்யாணத்தை ஒத்துக்கிட்ட உங்களால

அடுத்த மினி தொடர்

**என்.சி.மோகன்தாஸ்**



இந்த கல்யாணத்தை ஒத்துக்கிட முடியல. நீங்க மட்டுமில்ல... படியேறி வந்து பாரதியக்காவைப் புகழ்ந்தவங்களால என்னை அப்படி புகழ முடியாது. அந்தக் கல்யாணத்துக்கு அப்புறம் இந்தக் கல்யாணத்தை உங்களால நடத்த முடியாது. கோடீஸ்வரங்கள்லாம் வந்து ஆசீர்வதிச்ச கல்யாணம் அது. கோடி வீட்டுக்காரங்க கூட வர முடியாத கல்யாணம் இது.. அக்கா கல்யாணத்தால நிமிர்ந்த உங்க தலை என் கல்யாணத்த நடத்துனா குனிய வேண்டி வரும்.." அவர் அவளை அப்படியே பார்த்துக் கொண்டு நின்றார்.

"ஏம்ப்பா அப்படி பார்க்குறீங்க.. நான் உங்களை சங்கடப்படுத்த இஷ்டப்படல. அதனால் தெரு கேட்டுச்சுன்னா, சொந்தக்காரங்க கேட்டாங்கன்னா கண்ணம்மா ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக் கிட்டான்னு சொல்லிடுங்க" என்றவள், "வாங்க மாணிக்கம். அக்கா கல்யாணம் பண்ணிக்கிட்ட அதே கோயில்ல நாமும் கல்யாணம் பண்ணிக்கலாம். அதேமாதிரி ரிஜிஸ்டர் கல்யாணமும் நடக்கும். ஆனா அந்த மாதிரி ரிசப்ஷன் மட்டும் நடக்காது. அது நமக்குத் தேவையும் இல்லை. நமக்குன்னு வர்ற நாலு பேர் போதும். சந்தோஷமா அவங்க கூட ஓட்டல்ல குலாப் ஜாமூனும். மசால் தோசையும் சாப்பிடலாம். அப்பா



“ நமக்குன்னு வர்ற நாலு பேர் போதும்!

வரேன். அம்மா வரேன்.." என்று மாணிக்கத்தின் கைபற்றினாள்.

"எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க.." என இருவருக்கும் பொதுவாக தரையில் விழுந்து கும்பிட்டு அமைதியாக அவனுடன் வெளியே நடந்தாள்...

**(முற்றும்)**